## நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 வெற்றி பெற

# கலைஞர் சிலை முன்பு உறுதி ஏற்போம்!

### திருச்சி தெற்கு மாவட்டத்தில் கலைஞர் சிலையை காணொலி வாயிலாகத் திறந்து வைத்து - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜன. 27–**

**நாடாளுமன்றத் தேர்தலில் 40 க்கு 40 வெற்றிபெற கலைஞரின் சிலை முன்பு, உறுதி ஏற்போம் என்று காணொலிக்காட்சியில் கலைஞர் சிலையை திறந்துவைத்து, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் சார்பாக, டோல்கேட் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) காலை நடைபெற்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் சிலையை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சென்னை, பசுமை வழிச்சாலை, குறிஞ்சி இல்லத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்துப் பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:

“இன்றைக்கு திருச்சி தெற்கு மாவட்டம் சார்பாக, கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைப்பதில், நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். அதற்கு முன்பு கடந்த 21 ஆம் தேதி சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணி மாநில மாநாட்டை மிகப்பெரிய ஒரு வெற்றிமாநாடாக மாற்றிக் காட்டிய உங்கள் அத்தனை பேருக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தலைவருக்கு அண்ணன், எங்களுக்கு வழிகாட்டி!**

மாநாட்டை ஒருங்கிணைத்து, இவ்வளவு சிறப்பான ஒரு வெற்றிமாநாடாக மாற்றிக் காட்டிய அண்ணன் நேரு அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணன் நேரு அவர்களை பார்க்கும்போது எனக்கு வியப்பாக இருக்கிறது. நேற்று என்னோடு நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கிட்டத்தட்ட ஐந்து மணி நேரம் கலந்து கொண்டார். அந்தக் கூட்டம் இரவு எட்டரை மணிக்குத்தான் முடிந்தது.

இன்றைக்கு அவர் திருச்சியில் கலைஞரின் சிலையைத் திறப்பு நிகழ்ச்சிக்காக அங்கே இருக்கிறார். அவருடைய உழைப்பைப் பார்த்து நான் வியக்கின்றேன். தலைவர் கலைஞரின் தளபதியாக இருந்து, நம்முடைய தலைவருக்கு ஓர் அண்ணனாக இருந்து இன்றைக்கு எங்களுக்கும் ஒரு வழிகாட்டியாக அவர் இருந்து கொண்டிருக்கிறார். அவருக்கு மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் 100 நாட்களுக்கு 100 நிகழ்ச்சிகளென நாள் தோறும் மக்கள் பயனடையும் வண்ணம் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். 75 நிகழ்ச்சிகள் நிறைவடைந்த நிலையில், 76ஆவது நிகழ்ச்சியாக திருச்சி டோல்கேட் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலையை மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாளான நேற்று முன்தினம், கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் மு.அன்பழகன் மாவட்டச் செயலாளர் வைரமணி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**நூற்றாண்டில் 100 நிகழ்ச்சிகள்!**

கலைஞரின் நூற்றாண்டு விழாவை, திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடி கொண்டு வருகிறீர்கள். முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டில் 100 நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும் என்று உறுதியேற்ற மாவட்டம், திருச்சி தெற்கு மாவட்டம். அதன்படி இதுவரை 75 நிகழ்ச்சிகளை நீங்கள் வெற்றிகரமாக நடத்தி முடித்து 76வது நிகழ்ச்சியாக இந்த சிலை திறப்பு நிகழ்ச்சியை நடத்திக்கொண்டு இருக்கிறீர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை பல மாவட்டங்கள் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருந்தாலும் அதில் முதன்மையான மாவட்டம் எதுவென்றால், திருச்சி தெற்கு மாவட்டம்தான். இந்த மாவட்டத்தில் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு கழகப் பொதுச் செயலாளர், முதன்மைச் செயலாளர் ஆகியோரை அழைத்துக் கழகக் கொடிகளைப் பல இடங்களில் ஏற்றியிருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல, திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக, தெருமுனைக் கூட்டங்கள், கருத்தரங்கங்கள், நலத்திட்ட உதவிகள், கலைவிழாக்கள், கலைஞரின் எழுத்தில் உருவான நாடகங்களை அரங்கேற்றுதல், விளையாட்டுப் போட்டிகள், கலைஞர் சிலை திறப்பு விழா, அணிகளுக்கான ஆலோசனைக் கூட்டங்கள், மருத்துவ முகாம்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளையும் நடத்தி இருக்கிறீர்கள்.

மற்ற மாவட்டங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக, எடுத்துக்காட்டாக இந்த நிகழ்ச்சிகளை நடத்தியுள்ள திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் நண்பர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**`தீரர்களுடைய கோட்டம்’திருச்சி!**

கலைஞரின் திருவுருவச் சிலையை திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை என மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும் திறக்க இருப்பதாக நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். கழகம் சார்பில் மட்டுமல்ல தான் பொறுப்பு வகிக்கின்ற பள்ளிக்கல்வித் துறை சார்பிலும் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில் திறக்க, நம்முடைய அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் கடுமையாக உழைத்தார்கள்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருகரங்களால் முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச்சிலை இன்றைக்குத் திறந்திருக்க வேண்டும். எதிர்பாராத சூழலால் தலைவர் அவர்களால் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள முடியவில்லை. எனவே, தலைவர் அவர்களின் ஆணையை ஏற்று கலைஞரின் சிலையைத் திறக்கின்ற வாய்ப்பை நான் பெற்றுள்ளேன்.

நமக்கெல்லாம் வழிகாட்டியாக கலைஞரின் சிலையை, `தீரர்களுடைய கோட்டம்’ என அவரால் புகழ்பட்ட திருச்சியில் திறந்து வைப்பது எனக்கு மிகப் பெரிய பெருமை. நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை அரசியலுக்கு அழைத்து வந்தது திருவாரூர் என்றாலும், அவரை முதன்முதலாக சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்தது இந்தத் திருச்சி மாவட்டம் தான்.

> “திருச்சி மாவட்டத்திலுள்ள கல்லக்குடியில் கலைஞர் அவர்கள் தலைமையேற்று நடத்திய போராட்டம் கழக வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ்நாட்டு வரலாற்றிலேயே மிக முக்கியமான ஒரு போராட்டம். திராவிட இயக்க வரலாற்றில் இப்படிப் பல வகையிலும் சிறப்பு பெற்ற திருச்சி மாவட்டத்தில்தான், இன்றைக்கு கலைஞர் அவர்களுக்கு நீங்கள் சிலையைத் திறந்திருக்கிறீர்கள்.”

**முதன்முறை சட்டமன்றம்!**

அன்றைக்கு ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்திலிருந்த குளித்தலை தொகுதியிலிருந்துதான் கலைஞர் அவர்கள் முதன்முறையாக சட்டமன்றத்திற்குள் சென்றார்கள். அதன் பிறகு, நின்ற அனைத்து தேர்தல்களிலும் தொடர்ந்து வெற்றியும் பெற்றார்கள். நம்முடைய கலைஞர் அவர்களின் மக்கள் பணிக்குத் தொடக்கமாக இருந்தது, இந்த திருச்சி மாவட்டம் தான். கலைஞருடைய மனதுக்கு மிகவும் பிடித்தமான ஊராக இருந்ததும் திருச்சி மாவட்டம்தான்.

திருச்சி மாவட்டத்திலுள்ள கல்லக்குடியில் கலைஞர் அவர்கள் தலைமையேற்று நடத்திய போராட்டம் கழக வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ்நாட்டு வரலாற்றிலேயே மிக முக்கியமான ஒரு போராட்டம். திராவிட இயக்க வரலாற்றில் இப்படிப் பல வகையிலும் சிறப்பு பெற்ற திருச்சி மாவட்டத்தில் தான், இன்றைக்கு கலைஞர் அவர்களுக்கு நீங்கள் சிலையைத் திறந்திருக்கிறீர்கள்.

**மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமி**

தமிழ்நாட்டிற்கே திருச்சிதான் மையம் என்று சொல்வார்கள். அந்தத் திருச்சியின் மையமான இடத்தில் இந்தச் சிலை இன்றைக்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்கள் இந்தத் திருச்சியில் உள்ள ரயில் நிலையத்திற்கு முன்புதான் தீக்குளித்து இறந்தார்கள். அவர் உயிரிழந்த நாளான ஜனவரி 25ஆம் தேதி இன்று நம்முடைய தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தை நடத்த இருக்கின்றோம்.

எந்தத் தமிழ் மொழியைக் காப்பாற்ற வேண்டும் என்று அன்று மொழிப்போர் தியாகிகள் தங்கள் உயிரையே கொடுத்தார்களோ, அந்தத் தமிழ் மொழியைத்தான் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் இந்தித் திணிப்பிலிருந்து காப்பாற்றினார் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். நம் தமிழ் மொழிக்கு செம்மொழி என்ற உயரிய அந்தஸ்தையும் பெற்று கொடுத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். எனவேதான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு இந்த வீரவணக்க நாளில் நாம் சிலை திறந்திருக்கிறோம் என்றால், அது நம் அத்தனை பேருக்கும் பெருமைக்குரிய நிகழ்ச்சி ஆகும்.

**நன்றி உணர்ச்சியின் அடிப்படையில் திருவுருவச் சிலை!**

நம்முடைய தலைவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைகளைக் கண்டாலே சிலருக்கு இப்போதெல்லாம் வயிறு எரிகிறது. அவர்களுக்கு வயிற்றெரிச்சல் ஏற்பட வேண்டும் என்பதற்காக, நாம் சிலை திறப்பது இல்லை. மாறாக, தமிழ்நாடு இன்றைக்குப் பல வகையிலும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது அதற்குக் காரணம் நம்முடைய தலைவர்கள் தான் என்ற அந்த நன்றி உணர்ச்சியின் அடிப்படையில்தான் இந்தத் திருவுருவச் சிலைகளை இன்றைக்கு நாம் திறந்து கொண்டிருக்கிறோம்.

எனவே, இறுதியாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிடலாமா? வேண்டாமா? என்ற முடிவு இந்தத் திருச்சி மாவட்டத்தில் நடந்த மாநாட்டில்தான் எடுக்கப்பட்டது. பெரும்பான்மையான தொண்டர்களின் விருப்பத்தின்படி, திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிடும் என்று அன்றைக்கு அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40 க்கு 40 இடங்களிலும் நம்முடைய இந்தியா கூட்டணித் தேர்தலில் வெற்றிபெற வேண்டும். அதற்கு, நீங்கள் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். இந்த உறுதியை கலைஞரின் சிலை முன்பு, நாம் அனைவரும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நமது உழைப்பினால் பெரும் வெற்றியை கழகத் தலைவர் அவர்களிடம் நாம் சமர்ப்பிப்போம் என்று கலைஞரின் சிலையின் முன்பு நாம் அனைவரும் உறுதி ஏற்போம் என்று கேட்டுக் கொண்டு சிலை திறப்பு விழாவை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும், நேரு அண்ணன் அவர்களுக்கும் அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்!”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

கழகத்தின் முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையிலும் திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையிலும் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாநகரக் கழகச் செயலாளர்கள் மதிவாணன், அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், அப்துல் சமது, மாவட்டக் கழகச் செயலாளர் வைரமணி, கவிஞர் சல்மா உள்பட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.





திருச்சி தெற்கு மாவட்டம் கலைஞர் நகர் பகுதி கழகத்தின் சார்பாக மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் திருச்சி கல்லுக்குழி மன்னார்புரம் பகுதியில் நடைபெற்றது. வட்டக் கழக செயலாளர் கணேசன் மூர்த்தி, ராஜேந்திரன் வரவேற்புரையில் பகுதி கழகச் செயலாளர் மணிவேல் தலைமையில், அமைச்சர் எ.வ. வேலு, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் செந்தமிழ்ச்செல்வன், பொற்கொடி, இப்ராஹிம், ரம்யாபேகம் ஆகியோர் நன்றியுரை ஆற்றினர்.



மதுரையில் மாமன்னர் திருமலை நாயக்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருஉருவச் சிலைக்கு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மேயர் இந்திராணி பொன்வசந்த், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், ஆர்.டி.ஓ. சக்திவேல், பூமிநாதன் எம்.எல்.ஏ., துணை மேயர் நாகராஜன், தி.மு.க. நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மா.ஜெயராமன், கே.தனசெல்வம், ஒச்சுபாலு, மூவேந்திரன், முகேஷ் சர்மா, சௌந்தர்ராஜன், வீர கணேசன், பாக்கியநாதன், ஜீவன் ரமேஷ், முத்து, ராஜேஷ் மற்றும் ம.தி.மு.க. சுருதி ரமேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளனர்.